பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 294 பிரசோற்பத்தி கார்த்திகை 17 ( 03 - 11 - 1991 ) ஞாயிறு

# சுவிஸ் நாட்டிலுள்ள இலங்கையரின் அரசியல் தஞ்சக் கோரிக்கை நிராகரிப்பு

சமீபகாலத்தில் சுவிஸ் நாட்டில் அகதிகளுக் கெதிராக நிகழ்ந்துள்ள எதிர்ப்புக்களும், வன்முறைகளும் அகதிகள் மீது கடும் போக்கை சுவிஸ் அரசு கடைப்பிடிக்க வேண்டிய நிலையினை உருவாக்கியுள்ளதாகத் தெரியவருகிறது. வன்முறையாளர்கள் அகதிகள் முகாம்களையும், இருப்பிடங்களையும் தாக்கியது தெரிந்ததே அங்கு ஏற்கனவே அரசியல் அடைக்கலம் பெற்றபலரும் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு இடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அடைக்கலம் கோரி விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமலே நிராகரிக்கப்பட்டுள்ளதாம் இந்த அகதிகளில் பல இலங்கைத் தமிழர்களும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே அரசியல் அடைக்கலம் பெற்றவர்களில் சிலர் வேறு இடங்களுக்கு மாறி மீண்டும் பதிவு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளுவதாகத் தெரியவருகிறது. இப்படி மீண்டும் பதிவுசெய்பவர்கள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

# மட்டு.மாவட்டத்தில் தொடரும் ராணுவ துன்புறுத்தல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா ராணுவம் தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு, அவர்கள் மீது தொடர்ந்தும் துன்புறுத்தல்களை மேற் கொண்டு வருகிறது. ராணுவத்தினரின் கெடுபிடிகளும்; துன்புறுத்தல்களும் அங்கு அதிகரித்துக் கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 30 ஆம் திகதி முதல் தமிழ் மக்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதுடன் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

மணல்சேனை என்ற இடத்துக்கு வந்த இராணுவத்தினர் அங்கு வசித்தவர்களைத் தாக்கிவிட்டு இளைஞர்களைக் கைது செய்ததாகவும் தெரிய வருகிறது.

மல்லிகைத் தீவைச் சேர்ந்த கந்தசாமி ஜெயசங்கர், வெருகலைச் சேர்ந்த கணேசன் திவாகரன் என்ற இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவார்கள்.

இதேவேளை மட்டக்களப்பைச் சேர்ந்த நான்கு இளைஞர்களையும் கைது செய்து சென்றதாகக் கூறப்படுகிறது

## வாழைநாரில் பொருள்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் அனுசரணையுடன் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவுக்கிளையின் பகுதிகளில் உள்ள பல இடங்களில் வாழைநாரில் பாவனைப் பொருள்கள் தயாரிப்பதில் பயிற்சி அளிப்பதற்கு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. 06

## இசையருவி வெளியீட்டு விழா யாழ் இந்து மகளிர் கல்லூரியில்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் உருவாக்கி வழங்கும் நாதஸ்வர கானவாரிதி வி.கே.பஞ்சமூர்த்தியின் நாதஸ்வர இசை ஒலிப் பதிவு நடாவான 'இசையருவி' இன்று வெளியிடப்படுகின்றது யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இன்று மாலை மூன்று மணிக்கு நடைபெறும்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மாதகல் கடற் படையினர் குடிமனைகள் நோக்கி பீரங்கித்தாக்கு

மாதகல் கடற்பகுதியில் ரோந்து சேவையில் ஈடுபட்ட கடற்படையினர். குடிமனைகளை நோக்கி கடும் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் கரையோரப் பகுதிகளை அண்டிய பலவீடுகள் சேதமுற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 06

## அராலியில் கலிபர் தாக்கு

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

நேற்று நண்பகல் 11-30 மணியளவில் அராலிப் பகுதியிலும் ஹெலிக்கொப்டர் கலிபர் தாக்குதலை மேற்கொண்டது. 01

## அகதிகள் விடயத்தில் ஜேர்மன் கண்டிப்பாக இருக்கும்

ஜேர்மனியில் அகதிகளாக அடைக்கலம் பெற்றோர் சிலரின் நடவடிக்கைகள் காரணமாக ஜேர்மன் அரசு அகதிகள் விடயத்தில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கின்றது.

இதற்குக் காரணம் அகதிகளாக அடைக்கலம் பெற்றோர் அவர்களுக்கு அளிக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பு - கொழும்பு ரயிலில் குடைபிடித்துப் பயணம்

மட்டக்களப்பு கொழும்பு புகையிரதத்தில் பயணம் செய்வோர் மழைபெய்யும் வேளைகளில் குடைபிடிக்க வேண்டிய அவல நிலை ஏற்படுகிறது.

இந்த ரயிலின் மேற் கூரை பழுது அடைந்து ஒழுக்கு ஏற்படுவதே இதற்குக் காரண

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பருத்தித்துறை கடற் படையினர் சுட்டதில் ஒருவர் பலி; ஒருவர் படுகாயம்

கடந்த வியாழக்கிழமை இரவு 9 30 மணியளவில் பருத்தித்துறை முனைப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொண்டதுப்பாக்கிப் பிரயோகத்தால் ஒருவர் பலியாகியுள்ளார், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தால் பருத்தித்துறை சென் தோமஸ் வீதியைச் சேர்ந்த தமியாம்பிள்ளை ஆசீர்வாதம் (38) என்பவரே அந்த இடத்தில் பலியானார். படுகாயமடைந்த அதே ஊரைச் சேர்ந்த மத்தியாஸ் அந்தோனி அன்ரன் (20) நீந்தி பொலிகண்டி கரையை வந்தடைந்தார்.

இதேவேளை கடற்படையினர் அப்படகில் இருந்த வெளியிணைப்பு இயந்திரத்தினையும் அபகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## முன்னாள் அமைச்சர் வாகனம் பொலிஸார் தடுத்துவைத்தனர்

முன்னாள் தொழில் தொழில் பயிற்சி அமைச்சர் திரு ஜீ எம் பிரேமச்சந்திராவுக்குச் சொந்தமான வாகனமொன்றினை நாரஹென்பிட்டி பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்

போலி இலக்கத்தகட்டுடன் காணப்பட்ட இந்த வாகனத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## படையினர் 'பரா' வெளிச்சம் குடியிருப்பு நோக்கிஷெல் தாக்கு

நேற்று முன்தினமிரவு அராலிப் பகுதியை நோக்கி தீவகப் படையினர் 'பரா' வெளிச்சத்தினை மேற்கொண்டவண்ணமிருந்தனர்.

இதேவேளை படையினர் குடியிருப்புக்களை நோக்கி நான்கு தடவைகள் ஷெல்த் தாக்குதல் மேற்கொண்டனர்

இத்தாக்குதல்களில் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை நிர்வாக சேவையில் பதவி உயர்வுபெற்ற ஒரே ஒரு தமிழர்

இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் வகுப்பிற்கு வடக்கு, கிழக்கு மாகாண சபை செயலாளரும் ஆளுநரின் ஒருங்கிணைப்பு அதிகாரியுமான ஜி. கிருஷ்ணமூர்த்தி பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவ்வருடம் முதலாம் வகுப்பிற்குபதவி உயர்வு வழங்கப்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## சார்க் மாநாட்டிற்கு வரும் தலைவர்களுக்கு ஜனாதிபதி செயலகத்தில் வரவேற்பு

சார்க் உச்சி மாநாட்டிற்கு கலந்து சிறப்பிக்கவரும் தலைவர்களை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவும், அவரது பாரியாரும் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து வரவேற்கவுள்ளார்கள்.

இந்த வரவேற்பு வைபவத்தின் போது விசேட குதிரைப் படையின் அணிவகுப்பு இடம் பெறுவதோடு, 21 பீரங்கி வேட்டுக்களும் தீர்க்கப்படும்.

இதேவேளை சார்க் உச்சி மாநாட்டின் வெளிவிகார அமைச்சர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இலங்கை வந்து சேரவுள்ளனர்.

இவர்கள் ஆறாவது உச்சி மாநாட்டிற்கான நிகழ்ச்சித் திட்டம் பற்றி முடிவுசெய்வதற்காக செவ்வாய், புதன் கிழமைகளில் கூடவுள்ளனர்.

## சமூகபாதுகாப்புச் சபை நிறுவ பாராளுமன்றத்தில் சட்டமூலம்

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையொன்று நிறுவப்படும். இதற்கான சட்ட மூலம் எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

சமூக பாதுகாப்பு நன்மைகள் ஒய்வூதியம் மற்றும் பிற சேமநலன்கள் ஆகியவை

— 04 ஆம் பக்கம் பார்க்க

# திருவாளர் நாயாருக்கும்- இனி தாண்டிக்குளத்தில் தடையே!

தாண்டிக்குளம் தடைமுகாமில் மனிதர்களை மட்டு மல்ல மிருகங்களையும் சோதனையிட வேண்டிய புதிய நிர்ப்பந்தமொன்று படையினருக்குத் தற்போது ஏற்பட்டுள்ளதாம்.

தடைமுகாமில் திருவாளர் 'நாயார்' ஒருவர் சில தினங்களுக்கு முன் எதிர்பாராத விதமாக அகப்பட்டுக் கொண்டதே இதற்குக் காரணமாம்

இந்த அழகிய சடை நாயின் கழுத்துப் பட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பென்ரோச் பற்றறிகள் இறுதியில் அந்த நாய்க்கே ஆபத்தாக மாறிவிட்டதாம்.

இந்தப் பழக்கப்பட்ட நாயார் படையினருக்கு டிமிக்கி விட்டு அடிக்கடி அப்பகுதியைத் தாண்டிச் சென்று வருவது வழக்கமெனவும், நாயின் 'அழகுநடையில்' மயங்கிய சிப்பாய் ஒருவர் அதனைத் தமது செல்லப் பிராணியாக்க முயன்ற போதே பற்றறிக் கடத்தல் விடயம் அம்பலத்திற்கு வந்ததெனவும் சம்பவ நேரம் அவ்விடத்தில் நின்ற பயணிகள் தெரிவித்தனர்.

நாயாரின் வருகையை எதிர்பார்த்துத் தடைமுகாமுக்கு வெளியே காத்து நின்ற 'எஜமானர்' விடயம் அம்பலத்திற்கு வரவே தலைமறைவாகி விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

★ பிரி. தூதுவராக அல்ல ஐரோப்பிய சமூக அதிகாரியாக

# மீண்டும் டேவிட் கிளாஸ்ட்ரோன் இலங்கையில் 'பணிபுரிய வருகிறார்!

இலங்கையிலிருந்து அண்மையில் அரசால் வெளியேற்றப்பட்ட பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாஸ்ட்ரோன் மீண்டும் இலங்கையில் பணிபுரிய வரவுள்ளார்.

அவர் பிரிட்டிஷ் தூதுவராக அல்ல ஐரோப்பிய சமூக அமைப்பின் பிரதிநிதியாகவே இலங்கைக்கு வரவுள்ளார்.

ஐரோப்பிய சமூகம் இலங்கைக்கு வழங்கும் உதவிகளை மேற்பார்வை செய்யும் பணி புதிதாக கிளாஸட்ரோனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அண்மையில் பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபிக்கப்பட்டது அங்கு உரையாற்றிய அத்தாவுட செனிவிரத்ன எம் பி 'நீங்கள் கிளாஸட்ரோனை வெளியேற்றினீர்கள், இன்னமும் அவரது இடம் நிரப்பப்படவில்லை இப்போது அவரை முழு ஐரோப்பிய சமூகமும் சேர்த்து மீண்டும் இங்கு அனுப்பப் போகிறது' எனக் குறிப்பிட்டார்.

## தேயிலைக் கொள்வனவை சிரியாவும் நிறுத்தியது

இலங்கையிடமிருந்து தேயிலை கொள்வனவு செய்வதை சிரியாவும் நிறுத்திக் கொண்டுள்ளது.

எகிப்து தேயிலைக் கொள்வனவை தொடர்கின்ற போதிலும் பல பிரதான நாடுகள் தேயிலைக் கொள்வனவை நிறுத்திக் கொண்டிருப்பதினால் தேயிலைச் சந்தை சரிந்துள்ளது.

1990இல் ஈராக் குவைத்தை ஆக்கிரமிப்புச் செய்ததில் இருந்து இலங்கை தேயிலை விற்பனையில் வீழ்ச்சியை எதிர் நோக்கி வருகின்றது

பெருமளவு தேயிலையைக் கொள்வனவு செய்யும் நாடுகளில் ஒன்றான ஈராக் மற்றும் ரஷ்யா என்பனவும்தேயிலைக் கொள்வனவை நிறுத்தியுள்ளன, (06)

## தொலைக்கல்வி செய்முறை யாழ் இந்துவில் நடைபெறும்

தொலைக் கல்வி மூலம் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர்களுக்கான இரண்டு நாள் செய்முறை வகுப்புக்கள் இம் மாதம் 9-ம், 10-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

89-91 கல்வியாண்டிற்கான பயிற்சியாசிரியர்களுக்கும், 90-92 கல்வியாண்டிற்கான பயிற்சியாசிரியர்களுக்கும், 91-93 கல்வியாண்டிற்கான பயிற்சியாசிரியர்களுக்கும் இச் செய்முறை வகுப்புக்கள் நடைபெறும் என யாழ் மாவட்ட தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் தெரிவித்தார்.

தொலைக்கல்வி மூலம்உடற் கல்வி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்களை உடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. 42)

## ஊர்காவல்முகாம்

ஏறாவூர் கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் ஊர்காவற் படை முகாம் அமைக்கப்பட்டதால் பாடசாலை கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்காதது குறித்து பெற்றோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

## இரத்தினக்கல் கொள்ளையில் கஜபாகு பிரிவு சிப்பாய்கள்!

இரகஸியப் பொலிஸார் எனக் கூறிக் கொண்டு இராணுவச் சீருடையில் எறிகுண்டு, ரிவால்வர் சகிதம் சென்ற நால்வர் மாத்தறை-ஹுங்கமை பகுதியிலுள்ள இரத்தினக்கல் வியாபாரியின் வீட்டிலிருந்து இரண்டு லட்சம் ரூபா ரொக்கப் பணத்தையும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கல் மற்றும் நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் உயர்மட்டக் குழு விசாரணைகளையடுத்து நால்வர் கைது செய்யப்பட்டதுடன் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களிலும் பெரும் பகுதி மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் அனுராதபுரம் கஜபாகு பிரிவைச் சேர்ந்த சிப்பாய்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# அகதிகளின் வருகையைத் தடுக்கும் பிரிட்டனின் புதிய விதிகள் அறிவிப்பு

பொருளாதார அகதிகளின் வருகையைத் தடுக்க மிகக் கடுமையான விதிகளை பிரிட்டன் அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிரிட்டிஷ் மகாராணி தனது உரையில் இவ் விதிகளை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலிருந்து பெருமளவில் பிரிட்டனுக்கு அரசியல் தஞ்சம் கோரிச் செல்வோரின் படையெடுப்பை இப் புதிய விதிகள் தடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது

## 'லக்ஸ்பிறே'யின் விலை விரைவில் உயருமென்கிறார் லலித்

''தனியார் நிறுவனத்தினருக்கு லக்ஸ்பிறே தொழிற்சாலை விற்கப்பட்டுள்ளது. எனவே நிச்சயமாக மற்று மோர் விலை உயர்வு மீண்டும் விரைவில் ஏற்படும்''

இவ்வாறுமுன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி அனுராதபுரத்தில் நடந்த கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

முன்னர் தொழிற்சாலை எரிந்த போதுகூட லக்ஸ்பிறே பால்மாவின் விலையை உயர விடாமல் தான் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். (06)

## வாழ்க்கைப் புள்ளி

அக்டோபர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 1138. 8 என புள்ளி விவர மதிப்பீட்டுத் திணைக்களம் கணித்துள்ளது.

கொழும்புப் பாவனையாளர் விலை அட்டவணையை அடிப்படையாகக் கொண்டே இக் கணிப்புச் செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்

பௌதிக விஞ்ஞான பீட மூன்றாம் வருடமாணவர்களுக்கான தூயகணிதம்

(PMG 32)
பரீட்சை
பிற்போடல்

மேற் கூறப்பட்ட பரீட்சை முன்னர் அறிவிக்கப்பட்டது போல் 6. 11. 91 ம் திகதி நடைபெறாது என்பதையும்இப் பரீட்சை 11.11 91 ஆம் திகதி மு ப 9.00 மணிக்கு கணித பிரிவு மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் மூன்றாம் வருட பௌதீக விஞ்ஞான மாணவர்களுக்கு அறியத் தருகிறேன். 11.11 91-ல் நடைபெற இருக்கும் BG 19, CS 08, ZS 05, PS 06, MS 09, STS 03. பாடங்கள் இரசாயனவியல் விரிவுரைமண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது எனவும் அறியத்தருகின்றேன்.

பதிவாளர்

11005

## புகலிட துஷ்பிரயோகம் ஜேர்மனும் நிறுத்த நடவடிக்கை

ஜேர்மனியில் புகலிடம் கோருவதற்கான உரிமை துஷ்பிரயோகம் செய்யப்படுவதை விரைவில் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென ஜேர்மன் அதிபர் ஹெல்மட் கோல் தெரிவித்துள்ளார்.

'ஜேர்மனியிலுள்ள வெளிநாட்டவர்களின் நிலை குறித்து உரையாற்றிய அவர் புகலிடம் கோருவோரின் படையெடுப்பு ஒரு பிரச்சினையாகும். எமது சட்ட அமைப்புக்கள் இதற்கு தீர்க்கமான நடவடிக்கை எடுப்பது அவசரத்தேவையாகும்' எனவும் அவர் தெரிவித்தார்.

## மரக்கன்றுகள் விநியோகம்

ஐம்பதினாயிரம் எலுமிச்சை மரக்கன்றுகளும் ஆயிரக்கணக்கான அகத்தி, பலா, நெல்லி ஆகிய மரக்கன்றுகளும் விநியோகம் செய்வதற்கு, தமிழீழ ஆய்வு நிறுவனத்தில் தயாராக உள்ளன.

தேவைப்படுவோர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கேட்டுள்ளது.

## தொண்டர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கிளையின் தொண்டர்களுக்கான முதலுதவிப் பயிற்சி எதிர் வரும் திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

# மருத்துவ நிபுணர்கள் பற்றாக்குறை ஆயிரத்தையும் தாண்டுகிறது!

நாட்டில் வைத்தியர் பற்றாக்குறை விவகாரம் மேலும் சிக்கல் நிலையை அடைந்திருப்பதாக மருத்துவ அதிகாரிகள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன

விசேட மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறை தற்போது ஆயிரத்துக்கும் அதிகமானதாகி விட்டது 350 விசேட நிபுணர்களே இப்போது நாட்டில் பணிபுரிகிறார்கள்.

மேலும் மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் 100க்கும் அதிகமான பயிற்சியாளர்கள் அவர்களது பட்டப்படிப்புக்களை பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டிய நிலையில் உள்ளனர் 7,8 வருடங்களாக இவர்கள் காத்துக் கிடக்கிறார்கள். இதற்கு 5கோடிரூபா தேவைப் படுகிறது,

இதனால் விரக்தியுற்ற நிலையில் இந்த டாக்டர்களும் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள் என அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பயிற்றுநருக்கு பயிற்சி

கல்வித்திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப் பெற்ற மூன்றாண்டுக் கல்வித் திட்டமிடல் பயிற்றுநருக்கான பயிற்சி வகுப்பு எதிர் வரும் 4 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை தினமும் காலை 8 30 முதல் மாலை 4 30 வரை யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## ஆபிரிக்க நாடுகளில் குடும்பநோயாக எயிட்ஸ்!

எயிட்ஸ் ஆபிரிக்காவில் ஒரு குடும்ப நோயாகப் பரவியுள்ளது இதனைத் தடுப்பதற்கு ஆபிரிக்கஅரசு சுவரொட்டிகள் மூலம் பொது இடங்களில் எயிட்ஸ் தடுப்பு முறைகள் பற்றி மக்களுக்கு பலத்த பிரசாரம்செய்து வருகிறது.

90-ம் ஆண்டு ஆபிரிக்காவில் 27 மில்லியன் குழந்தைகள் சாவுடன் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தன, 3 வயதுக் குழந்தைகள் பலர்கூட பெற்றோரை இழந்துள்ளனர் எயிட்ஸ் நோய் கூடுதலாக பரவியுள்ள நாடுகளில் கென்யா, சாம்பியா, உகண்டா ஆகியவை முதலிடம் வகிக்கின்றன. (22)

★ 'த ஐலண்ட்' பத்திரிகை தகவல்:

# புலிகள் - அரசு சமரசப் பேச்சு ஆரம்பமாவதை உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றன!

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதையே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றன இவ்வாறு கொழும்பிலிருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி இரண்டாம் வாரத்தில் பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் இலங்கை ஆயிரம் மில்லியன் டாலரை உதவித் தொகையாகக் கேட்கவுள்ளது.

கடந்த அக்டோபரில் நடைபெற்ற கூட்டத்தில் இலங்கைக்கு இத்தொகையை வழங்க இணக்கம் காணப்பட்டது எனினும் இத்தொகையின் கணிசமான அளவை வடக்குக் கிழக்கு மோதல்கள் நிறுத்தப்பட்டதன் பின்னர் அப்பகுதிகளின் புனர் நிர்மாணத்திற்கெனவே வழங்க முடியுமெனவும் இக்கூட்டத்தில் உதவி வழங்கும் நாடுகள் தெரிவித்து விட்டன.

இதன் பொருட்டு அரசு - விடுதலைப் புலிகள் சமரசப் பேச்சை உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றன வரவேற்கின்றன என 'த. ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகை மேலும் எழுதியுள்ளது.

## கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்திலுள்ள சகல உற்பத்திக் குழுக்களின் தலைவர், செயலாளர்கள் கலந்துகொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் 04- 11-91 திங்கள் [மாலை 2 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## அடுத்த கப்பலில் தபால்கள்

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு அடுத்துவரும் கப்பலில் தபாற் பொதிகளும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (06)

## அரச நியமனங்களில் பாதிப்புற்றோருக்கு சலுகை!

பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிப்புற்றோருக்கு அரச நியமனங்களில் முன்னுரிமை வழங்கும் புதிய திட்டமொன்று அமுலுக்குக் கொண்டு வரப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பயங்கரவாத நடவடிக்கைகளினால் பாதிப்புற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஒரு அங்கத்தவருக்கு அரச நியமனங்களில் புள்ளியடிப்படையில் சலுகை வழங்கப்படும்.

## லண்டனில் சுகவீனம்

ஈரோஸ் பிரமுகர் இரத்தின சபாபதி திடீர் சுகவீனமுற்று லண்டனில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகக் கொழும்புத் தகவலொன்று தெரிவிக்கிறது.

ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபகர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து இரு பொலிஸாருக்கு கல்தா!

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவரையும், கான்ஸ்டபிள் [ஒருவரையும் சேவையில் இருந்து பொலிஸ் தலைமையகம் நீக்கியுள்ளது.

கடந்த ஆண்டு பாணந்துறையைச் சேர்ந்த நிமால் பெர்னாண்டோ என்பவரை இந்த இரு பொலிஸாரும் தாக்கியுள்ளனர்

இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இவர்கள் குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்பட்டதையடுத்தே இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (24)

## இலங்கையில் தற்போது 6 கோடி ரூபா கறுப்புப் பணம்!

நாட்டில் தற்போது 6கோடி ரூபா கறுப்புப் பணம் இருப்பதாகக்கணக்கிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் என்பன கூட்டாக இந்தக் கணக்கெடுப்பை நடாத்தியுள்ளன.

இக்கறுப்புப் பணத்தை வெளிக் கொணர்வதற்காகப் பல புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. கறுப்புப் பணத்தைப் பொதுத் திட்டங்களில் முதலிட முன்வருவோருக்கு வரி விலக்களிப்பதும் அதில் ஒன்றாகும்.

## தீபாவளி போது மன்னிப்பு; சிங்களக்கைதிகளுக்கே வாய்ப்பு!

தீபாவளி தினத்தை முன்னிட்டு 1500 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

மேலும் இதனை முன்னிட்டு ஒரு வருடத்திற்கு 3 மாதங்கள் என்ற அடிப்படையில் கைதிகளின் தண்டனைக்கான காலம் குறைக்கப்படவுள்ளது அத்துடன் மரண தண்டனைகள் அனைத்தும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுள்ளது

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வழங்கப்படும் இப்பொது மன்னிப்பினால் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழும், விசாரணை என்ற பெயரிலும், பயங்கரவாதச் சட்டத்தின் கீழும் தடுத்து வைக்கப்பட்டுள்ள பெருமளவு தமிழ்க் கைதிகளுக்குப் பயன் கிடைக்காது எனவும் சாதாரண சட்டத்தின் கீழ் தண்டனை பெறும் பெருமளவு சிங்களக் கைதிகளுக்கே இது உதவுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொட்டடித் தாக்குதலினால் சேதமான வீடுகளின் விவரம்

கடந்த மாதம் 22ஆம் திகதி யாழ் கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில் அவ்ரோ விமானம் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலின் போதும், 19 ஆம் திகதி படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின்போதும் அப்பகுதியில் சேதமான வீடுகளின் விவரம் தற்பொழுது திரட்டப்பட்டுள்ளது.

கொட்டடி ஆஸ்பத்திரி வீதியில் அவ்ரோ விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலின் போது அங்கு பொன்னம்பலம் கணேசலிங்கம் என்பவரின் வீடு முழுமையாகச் சேதமடைந்ததுடன் அங்கிருந்த முழுத் தளபாடங்களும் சேதமாகின.

மற்றும் கந்தசாமி பாலச்சந்திரன், கந்தசாமி யோகச்சந்திரன், இரத்தினம் முருகவேள், அ. மகாதேவன் ஆகியோரின் வீடுகளும் சேதமுற்றன.

சீனிவாசகம் வீதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் தருமலிங்கம் குணரட்ணம் என்பவரின் வீடும், பரமநாதன் என்பவரின் வீடும் சேதமாகியுள்ளன. (07)

## புலிகளை படையினால் தோற்கடிக்க முடியாது; தமிழ்நேசன் பத்திரிகைக்கு தொண்டமான் பேட்டி

விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்காப் படைகளினால் தோற்கடிக்க முடியாது. இப்படி அமைச்சர் தொண்டமான் லண்டனில் இருந்து வெளியாகும் 'தமிழ் நேசன்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார். இதுகுறித்து மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்திலும் பிரஸ்தாபித்தார்.

'தொண்டமான் ஐ தே. க. வின் ஒரு எம் பி. அமைச்சரவையின் உறுப்பினர். அவர் எவ்வாறு இத்தகைய கருத்தைக்கூற முடியும்? வேறு அரச எம். பி யாவது, அமைச்சராவது இவ்வாறு சுயாதீனமாக கருத்தை வெளியிடக் கூடிய சுதந்திரம் இருக்கிறதா?

'அமைச்சர் தொண்டமான் இப்படி ஒரு கருத்தைக் கூறியுள்ளமை இலங்கைப் படைகளை அவமதிப்பதாகவே உள்ளது' என தினேஷ் குணவர்த்தனா சபையில் தெரிவித்தார்.

## சிங்கள உதவி அரசஅதிபர்களுக்கு திருமலையில் காணிக் கருத்தரங்கு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் சிங்கள உதவி அரச அதிபர்களுக்கான கருத்தரங்கொன்று இன்றும் நாளையும் திருமலையில் நடைபெறவுள்ளது.

காணி விடயங்கள் தொடர்பாக உதவி அரச அதிபர்களுக்கு இக்கருத்தரங்கில் விளக்கவுரைகள் வழங்கப்படவுள்ளனவாம்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனிவிரத்ன காணி ஆணையாளர் சாந்த சிறி விக்கிரம ஆராச்சி, வடமேல் மாகாண காணி ஆணையாளர் கே. எச். அபேகூன் ஆகியோரும் இக் கருத்தரங்கில் பங்குபற்றவுள்ளனர். (06)

## பதவியேற்பு

தமிழக உணவு அமைச்சராக ஜி. விஸ்வநாதன் பதவியேற்றுள்ளார். நுகர்வோர் துறை, புள்ளிவிபரத்துறை, விலைகட்டுப்பாடு ஆகிய துறைகளையும் இவர் கவனிப்பார்.

## சாட்சிகள் ஆஜராகாமையால் கொக்கட்டிச்சோலைவிசாரணைஒத்திவைப்பு

'மட்டக்களப்பில் இடம் பெற்று வந்த கொக்கட்டிச் சோலை சம்பவ கமிஷன் விசாரணை சிலதினங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

'சில தினங்களுக்கு முன் மண்முனைத்துறைக் கருகில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பல இராணுவத்தினர் இறந்துள்ளதினால் மகிழடித்தீவு வாசிகள் பீதி காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர். இதனால் அழைப்பாணை வழங்கப்பட்ட 47 சாட்சிகள் மட்டக்களப்பு விமான நிலையத்தில் நடைபெறும் இவ்விசாரணை முன் சாட்சியமளிக்க வர முடியவில்லை' எனப் பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர்களில் ஒருவரான கனகசபை ஜெயதரன் ஆணைக்குழு முன் தெரிவித்ததையடுத்தே விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

## இன விகிதாசாரத்துக்கமையவே பட்டதாரி ஆசிரிய நியமனம்

மாவட்ட ரீதியில் நடைபெறவுளள பட்டதாரி ஆசிரியர் நியமனம் புதிய இன விகிதாசார முறைக்கேற்பவே நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது

மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்கள் அந்தந்த மாவட்டங்களின் இனவிகிதாசார தொகைக்கேற்ப நிரப்பப்படும்.

## கோரிக்கை

இனப்பிரச்சினை தீர்வுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு சர்வகட்சி மகாநாட்டு தமிழ்ப்பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைக் கோரியுள்ளனர்.

இப் பிரதிநிதிகள் அனுரா பண்டாரநாயக்காவை சந்தித்து இக் கோரிக்கையை நேரில் விடுத்தனர்.

## கஷ்ட நிவாரணம் இல்லை

யாழ் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு 18 மாத கஷ்ட நிவாரண ஊக்குவிப்புப் பணம் இதுவரை வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது. (13)

★ 3 வேவுப் படகுகள் ★ 8 பீரங்கிப் படகுகள் ★ 4 பாரிய கப்பல்கள் ★ 15 அதிவேகப் படகுகள் ★ 10 ரோந்துப் படகுகள்

## ஸ்ரீலங்கா கடற்படையில் தற்போது 8000 சிப்பாய்கள்; 600 அதிகாரிகள்

1953 ஆம் ஆண்டு 'றோயல் சிலோன் நேவி' யில் 300 படையினரும் 35 அதிகாரிகளும்மட்டுமே இருந்தனர். ஆனால் தற்பொழுது ஸ்ரீலங்கா கடற்படையில் 8000 சிப்பாய்களும் 600 அதிகாரிகளும் உள்ளனர்.

ஓய்வு பெற்றுச் செல்லும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிறல் ஆனந்த சில்வா இந்த விவரங்களைத் தெரிவித்துள்ளார்.

கடற்படை விஸ்தரிக்கப்பட்டதன் விளைவாக 3 வேவுக் கப்பல்கள், 8 பீரங்கிப் படகுகள், 4 பாரிய கப்பல்கள், எதிரிப் படகுகளை மடக்குவதற்கான சகல வசதிகளையும் கொண்ட 15 அதிவேகப் படகுகள், 10 ரோந்துப் படகுகள் மற்றும் பல உள்ளூரில் தயாரிக்கப்பட்ட படகுகள் ஆகியன படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரச அதிபரின் அறிவித்தல்'

உதவி அரசாங்க அதிபர்களையும் அவர்களின் மட்டத்திலுள்ள பாவனையாளர் பாதுகாப்பு குழு அங்கத்தவர்களையும் குறித்த நேரத்தில் வந்து சந்திக்கும்படி அரச அதிபர் கேட்டுக் கொள்கிறார்

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சண்டிலிப்பாய் சங்கானை, உடுவில், தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்களை யாழ் செயலகத்தில் காலை 11 மணிக்கும். தென்மராட்சியிலுள்ள உதவி அரசாங்க அதிபர்களை சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனையில் பி.ப 2 மணிக்கும், வடமராட்சி உதவி அரச அதிபர்களை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பி. ப 4 மணிக்கும் சந்திக்கும்படி கேட்கப்பட்டுள்ளார்கள். 06

## அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம்

### குறைந்த விலையில் பாண் விற்பனை

பாணின் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூபா, 7.50 சதம் என அறிவிக்கப்பட்ட போதிலும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கூட்டுறவுப் பேக்கரியில் உற்பத்தி செய்யும் பாணினை ரூபா. 7/-க்கும். பணிஸ் ரூபா. 2/-க்கும் விற்பனை செய்து வருகின்றது.

பொதுமக்களின் வசதிகருதி இச்சங்கம் தனது கிளைகளாகிய அச்சுவேலி புடவை, புத்தூர் இரும்பு விற்பனை நிலையங்கள் உட்பட சகல நுகர்ச்சிக் கிளைகளிலும் காலையும் மாலையும், தரமான பாண் சரியான நிறையில் விற்பனை செய்து வருகின்றது

### ஜேர்மன்...

கப்பட்ட உரிமையைத் துஷ்பிரயோகம் செய்ததேயாகும்.

இது பற்றி கருத்து வெளியிட்ட ஜேர்மன் அதிபர் அகதிகள் படையெடுப்பு நாட்டிற்கு பிரச்சனையை உருவாக்குவதாகவும், இனிமேல் மிகுந்த கட்டுப்பாடு விதிக்கப்படுமென்று சொன்னார்.

### சமூக...

தொடர்பாக செயற்திட்டத்தினை வகுத்து அவற்றைப் பெற்றுக் கொடுக்க இச்சட்டத்தின் மூலம் வகை செய்யப்படும். பதில் தொழில் அமைச்சர் என்றவகையில் பிரதமர் இச்சட்டத்தைச் சபையில் சமர்ப்பிப்பார். 08

### இலங்கை...

பட்ட ஒரேயொரு தமிழர் இவராவர் இதற்கான நியமனக் கடிதம் அண்மையில் ஜனாதிபதியால் வழங்கப்பட்டது. 08

### முன்னாள்—

தின் சாரதி திருமதி பிரேமச்சந்திராவின் நெருங்கிய உறவினர் என பொலிஸார் தெரிவித்தனர். 08

### மட்டக்களப்பு...

மாகும் மழைபெய்யும் சமயங்களில் ரயில் பயணிகளின் உடமைகளும் நனைந்துபோய் விடுகிறது.

இதுபற்றி ரயில் நிலைய அதிகாரிகளிடமும் பயணிகள் எடுத்துக்கூறி உள்ளனர். 06

### சுவிஸ்...

கொம்பியூட்டர் மூலம் கண்டு பிடிக்கப்பட்டு வெளியேற்றப் படுவதாக கூறப்படுகிறது. அரசியல் அடைக்கலம் நிராகரிக்கப்பட்ட இந்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருவதாகத் தெரியவருகிறது.

### இசையருவி

இவ் விழாவிற்கு விடுதலைப் புலிகள்கலை,பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தலைமை தாங்குகிறார். திரு. தேவர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முதல் நாடாவை வெளியிட்டு வைக்கின்றார். விடுதலைப் புலிகளின் யாழ் பிராந்திய சிறப்புத் தளபதி திரு.தமிழ்ச்செல்வன் ஒலிப்பதிவில் பங்கேற்ற கலைஞர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்த பின்னர், மக்கள் முன்னணிச் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி, மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, மற்றும் வண. பிதா பிரான்ஸிஸ் ஜோசப் அடிகளார், திரு. ந. வீரமணி ஐயர், நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன், திரு. பொன். சுந்தரலிங்கம், நவாலியூர் திரு. க. சச்சிதானந்தன், கம்பன் கழகம் திரு இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்த இசையருவி ஒலிப்பதிவு நாடாவில் பத்து தாயக விடுதலைப் பாடல்களை திரு. வி. கே. பஞ்சமூர்த்தி அவர்கள் நாதஸ்வர இசையாக்கி அளித்துள்ளார். நாதஸ்வர இசையுடன் தவில், மிருதங்கம், தபேலா, வயலின் உட்பட மேற்கத்தைய இசைக் கருவிகளையும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடிய சிறப்பம்சமாகும்.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் தமிழ்க் கலைஞர்களின் படைப்புக்களை ஒலிப்பதிவு நாடாக்களாகத் தொடர்ந்தும் வெளியிடுவது என்ற திட்டத்தின் உருவாக்கமே இந்த ஒலிப்பதிவு நாடாவாகும். இன்றைய வெளியீட்டு விழாவிற்கு சகல கலைஞர்களையும், ஆர்வலர்களையும் வருகை தரும்படி அழைப்பு விடப்பட்டுள்ளது.

## ★ கிடைக்கக்கூடிய பொருள்களை

# சகலருக்கும் பகிர்ந்தளிக்க

# யாவரும் ஒத்துழையுங்கள்

### -பாவனையாளர் குழு வேண்டுகோள்

தற்பொழுது நடைபெறும் போர் ஆரமபித்த நாள் முதல் அரசாங்கம் யாழ்ப்பாண மக்களிற்கு எதிரான பொருளாதாரத் தடையை மேற்கொண்டு வந்துள்ளது. யாவரும் அறிந்ததே இத்தடை இப்பொழுது மேலும் உக்கிரமடைந்து வருகிறது.

இதனால் இம் மாவட்டத்தில் ஒரு பஞ்ச நிலை ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. இந் நிலையில் கிடைக்கக்கூடிய பொருள்களின் விநியோகத்தைச் சீர் செய்வதன் மூலமே சகலருக்கும் பொருள்களை ஓரளவேனும் நியாயமான அளவில் விநியோகிக்கலாம்.

பொதுவாக போர்க்காலங்களில் பதுக்கலும் கொள்ளை இலாபம் சம்பாதிப்பதும் இயல்பான சமூக விரோதச் செயல்களாக உள்ளன. இதன் தாக்கம் பொது மக்களைப் பெரிதும் பாதிக்கிறது. யாழ்ப்பாண நகர வீதிகளில் மண்ணெண்ணெய், சவர்க்காரம் போன்றவற்றைக் காணக் கூடியதாகவிருக்கிறது. ஆனால் அவற்றின் விலை மக்களின் வாங்கும் சக்திக்கு மிக எட்டிய தூரத்தில் இருக்கிறது மாதக் கணக்காக விளக்கு எரியாத வீடுகளும், அழுக்கு நீக்கப்படாத ஆடைகளும் நிரம்பிய வீடுகளும் இருப்பதை எல்லோரும் அறிவோம்

அதே வகையில் மனிதனின் மிக அடிப்படைத் தேவையான உணவும் பற்றாக்குறையாக இருக்கிறது விலையும் மிகக் கூடுதலாகவே இருக்கிறது. இதன் மூலம் உணவுக் குறைபாட்டினால் சகல மக்களும் துன்பப்படுகிறார்கள்.

இந்நிலையில் இயன்றளவு பொருள்களைத் தருவிக்கவும் தருவித்தவற்றை நியாயமான அளவில் எல்லோரும் பெறக் கூடியதாக விநியோகிக்கவும் கூடிய ஒழுங்குகளை உயரதிகாரிகள் பாவனையாளர் குழுக்களுடன் இணைந்து செயற்படுத்துகிறார்கள்.

இத்திட்டத்தின் நோக்கம் உள்ளதை எல்லோருடனும் பகிர்ந்து உபயோகிப்பதேயாகும். யாரையும் துன்புறுத்தவோ அல்லது யாருக்கும் அதிக நன்மைகளை வழங்கவோ அல்ல போர்க்காலங்களில் கூட்டுறவுத் துறைமூலம் பொருள்களை விநியோகிப்பதில் நியாயமான விநியோகத்தை உறுதி செய்யக்கூடியது என்பது இரண்டாம் உலகப் போரின் காலத்திலிருந்தே அனைவரும் அறிந்து கொண்ட தொன்றாகும்

இதன் அடிப்படையில் தற்பொழுது சில அத்தியாவசியப் பொருள்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கையையும் தொகையையும் நாளடைவில் கூட்ட முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

ஆனால் நமது நாடு இன்றுள்ள நிலையில் இவ் விநியோகத்தை முறையாகச் செய்ய தனியார் துறையின் ஒத்துழைப்பும் தேவை தனியார் துறையினரும் தங்களிடம் உள்ள பொருள்களை நியாயமான விலையை நிர்ணயித்து அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக பங்கீட்டு முறையில் விற்பனை செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

பாவனையாளர் குழுக்களின் முழுநோக்கம் கிடைக்கக்கூடிய பொருள்களை அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதாகும். அதே நேரத்தில் பதுக்கல், கொள்ளை இலாபம் போன்ற சமூக விரோதச் செயல்கள் தோன்றின் அவற்றைக் கட்டுப்படுத்துவதுமாகும். சொந்த சகோதரத் தமிழர்களின் துன்பங்களில் இலாபம் காண நினைக்கும் தமிழ் வர்த்தகர்கள் இல்லை யென்றே நம்புகிறோம். ஆனால் நமது தனியார் வர்த்தகர்களும் நாட்டினதும், மக்களினதும் நிலைகளை உத்தேசித்து தங்கள் பொருள்களை நியாயமான விலையிலும், அளவிலும் சகலருக்கும் விநியோகிக்க பாவனையாளர் குழுக்கள் உதவியாக இருக்கும்

உணவுப் பற்றாக்குறை காரணமாக பட்டினிச் சாவுகள் தோன்றுவதையோ அல்லது விநியோகக் கட்டுப்பாடு இன்மையால் சகலருக்கும் கிடைக்கக்கூடியதும் கிடையாமல் போய்விடுவதையோ தடுக்கவேண்டிய கடமை முழு சமூகத்தையும் சேர்ந்த ஓர் சமூகக் கடமை. இக் கடமையை நிறைவேற்ற பொதுமக்கள் தனியார்துறை வர்த்தகர்கள் கூட்டுறவுத் துறையினர் ஆகிய அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படவேண்டும் என்ற கோரிக்கையை பாவனையாளர் குழுக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## வங்கி அதிகாரிகள், ஊழியர் கலந்துரையாடல்

வலிகாமம் பிரிவிலுள்ள யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், சங்கானை, காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் நிகழ்வொன்று நாளை திங்கட்கிழமை மாலை மூன்று மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது இக் கலந்துரையாடல் நிகழ்வில் வங்கியாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

### தட்டுப்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்போது பெரும்போக வேளாண்மைச்செய்கை ஆரம்பமாகி உள்ளபோதும் விதை நெல்லுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் பெரும்போக வேளாண்மை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. 06


இன்று வெளியிடப்படும் நாதஸ்வர இசை ஒலிப்பதிவு நாடா

'இசையருவி'க்கு எமது வாழ்த்துக்கள்!

இசை நாடாவை உருவாக்கிய

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்துக்கும்

நாதஸ்வர கானவாரிதி வி. கே. பஞ்சமூர்த்திக்கும்

எமது பாராட்டுக்கள்!

மகாராணி பிடவை மாளிகை,

50, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

11001


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி (?) 'லஸ்மி பில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 03. 11 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.